# மாசு

ஓரோரு கடிதமாக ஒதுக்கிவிட்டுக் கொண்டிருந்த தபாற்காரனைப் பார்த்தவாறு பொறுமையிழந்து நின்றுகொண்டிருந்தாள் வசந்தி. தபாற்காரனைத் தெருக்கோடியில் கண்டதுமே, தெருக்கோடி வீட்டிற்கு ஓடி வந்திருக்கிறாள் - அவன் பார்த்துத்தானே எடுத்தாகணும் தபாற்கட்டுக்குள்ளே பதுங்கியிருக்கும் 56-ம் நம்பர் வீட்டுக்குரிய கடிதங்களை? நாற்பத்தொன்பதாம் நம்பர் வீட்டின் வாசலில் நிற்கிறான் அவன் - இன்னும் ஏழு வீடுகளுக்குப் பட்டுவாடா செய்ய வேண்டிய கடிதங்களை அவன் ஒவ்வொன்றாக ஒதுக்கிவிட்டுக்கொண்டிருந்தான் - இந்தப் பன்னிரண்டு வயதுப் பெண்ணின் ஆவலைத் தீர்க்கத்தான் விழைந்திருந்தான்.

"அதோதோ . . . போஸ்ட்மேன்! அது எங்களுக்குத்தான் புத்தகம்!' எனக் கூவினாள் வசந்தி.

"இது அவுங்களுக்கும்மா! அம்பத்தி அஞ்சுக்கு?' என்று சிரத்தையாகவே அவளுக்கு விடை பகர்ந்துவிட்டு அவள் கையில் இரண்டு கடிதங்களை மட்டும் தபாற்காரன் வைத்தான்.

சிறுவர் சிறுமியர்களுக்கான அந்த மாதப் பத்திரிகையைத் தனக்கும் எதிர்பார்த்திருந்தாள் வசந்தி. வந்த புத்தகம் அவளுக்கு அல்ல. ஆதலால், மாபெரும் ஏமாற்றம் வசந்திக்கு.

"ஏன் எனக்கு வரவில்லையா?' என்று கேட்டாள்.

"வரல்லையேம்மா!"

"ஏன் வரல்லை?"

'தெரியாதும்மா! நாளைக்கு வந்தாலும் வரலாம்!"

தபாற்காரன் அடுத்த வீட்டை, ஐம்பதாம் நம்பர் வீட்டை அடைந்தான். வசந்தியும் புறப்பட்டாள் பரபரவென்று தன் இல்லம் நோக்கி.

வீட்டிற்குப் போனதும் விஷயம் தெரிந்தது அவளுக்கு தந்தையிடம் கொண்டு போய்க்கொடுத்த கடிதங்கள் இரண்டும் முக்கியமானவை: ஒன்று அண்ணா வாசு கல்கத்தாவிலிருந்து எழுதியது; மற்றொன்று சிறுவர் சிறுமியர் பத்திரிகைக் காரியாலயம் எழுதியிருப்பது!

பத்திரிகை இனிமேல் வராது!

"அண்ணா பணம் கட்டல்லையாம்மா! இனிமேல் வராது புத்தகம் . . . இன்னும் ஐந்தாறு மாதங்கள் கழித்துக் கட்டலாமே என்று எழுதியிருக்கிறான்," என்றார் அவள் தந்தை நாராயணசாமி.

வசந்தி முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டுவிட்டாள்.

"உம் . . . உம் . . . . "

இதற்குள் விவரம் உணர்ந்த அவள் தாய் மீனாக்ஷியே வந்துவிட்டாள் அந்த இடத்திற்கு.

"ஏனாம்? ஏன் இனிமேல் வராதாம்?"

"கேள்வியென்ன. அசட்டுக் கேள்வி! சந்தா தீர்ந்து போச்சு! வராது!" என்றார் அவர் கோபமாகவே.

"ஏன்? அந்த ரிமைண்டர் கடுதாசி வந்ததைப் பற்றி நீங்கள் வாசுக்கு எழுதல்லையாக்கும்!" எனத் தாக்கினாள் மீனாக்ஷி.

"ஆமாமாம்! ரொம்பக் கண்டவள்! எல்லாம் அவனுக்குத் தெரியும்! ரிமைண்டர்' வந்த கார்டையே அவன் விலாசம் போட்டு அனுப்பிச்சாச்சு! அவனும்தான் எழுதியிருக்கானே! இப்போ கட்டுகிற உத்தேசம் அவனுக்கு இல்லை!" என்றார் அவர் பதட்டமாக.

"அப்படியா?"

"ஆமாம்!' எனப் பதிலளித்தார் நாராயணசாமி, ஒரு தினுசாக; பிறகு ஒரு கணம் இடைவெளி மோனம்.

"இந்தா, பார்! அவனேதான் எழுதியிருக்கான் இந்தக் கடுதாசி" ஒரு வெள்ளைத்தாளை நீட்டினார் அவர். இப்போது அவர் குரலில் தணிவு தென்பட்டது.

"எனக்குத்தானா எழுதியிருக்கான்?" பெருமை பளிச்சிட இவ்வாறு கேட்டுவிட்டு கடிதத்தைப் படிக்கத்தொடங்கினாள் மீனாக்ஷி. ஆனால் படிக்கும்போதே முகத்திலே மாறுதல் ஏற்பட்டுவிட்டது - நெற்றி சுருங்கிவிட்டது, வேண்டாத காகிதம்போலே.

"ஏன்னா? இந்த விசை ஐம்பது தான் அனுப்பறானாமே! பதினைந்து நாளாய் எதிர்பார்த்து எதிர்பார்த்து...."

மேலே பேச இஷ்டம்தான் இல்லையோ, கூச்சமோ . . . அறுந்து நின்றன வார்த்தைகள் ஆனால். மனதில், யோசனை சங்கிலி கோத்துக் கொண்டுவிட்டது.

"என்ன காரணமோ, தெரியல்லே!' என்று சாதாரணமாகப் பேசும் பாணியில் - கஷ்டப்பட்டு வரவழைத்துக்கொண்ட நிதானமுடன் - கூறிவிட்டு நிறுத்தினார் நாராயணசாமி.

"இதென்ன கூத்து? தாமசமாக்கிவிட்டதனாலே ஒரு இருபதோ நாற்பதோ கூட அனுப்ப வேண்டியது போக...."

"அனுப்ப வேண்டியது என்ன? எல்லாம் அப்படி அப்படித்தான்!" என விரக்தியாக மொழிந்தவாறே சடாரென நாராயணசாமி எழுந்து போவதையே பார்த்துக்கொண்டு நின்ற மீனாக்ஷியை, வசந்தி அணுகினாள்.

"ஏம்மா - புஸ்தகம்?"

"ஆமாண்டி! நீ ஒண்ணு! புஸ்தகம் இல்லாததுதான் குறை! போய்ப் பிச்சை எடுத்து வாசி!"

சுர்ரென்று பெண்மீது சீறிவிட்டு சரசரவென சமையலுள் புகுந்துவிட்டாள் மீனாக்ஷி கொஞ்ச நேரங்கழித்து அந்த மனவெழுச்சி அடங்கிவிட்டது. பிள்ளைபால் பாசமோ, பெண் மீது அனுதாபமோ - தன்கோபம் நியாயமற்றது என்ற எண்ணம் லேசாக எழுந்தது அவள் மனதிலே.

"வசந்தி! சாப்பிட வாடிம்மா!'என்று அழைத்து அவளை உண்டிக்கு உட்கார்த்தினாள்.

"அண்ணாக்கு உன்னைப் பார்க்கணும்னு ஆசையா இருக்காமே! எழுதியிருக்கானே! கடுதாசி படிச்சயோ? தமிழிலேயே எழுதியிருக்கானே, நாம் எல்லோருமே படிக்கணும்னு!" என்று அருமையுடன் பெண்ணைக் கேட்டுக்கொண்டே சாதம் போட்டாள்.

"ஊஹும்" என்று தலையசைத்தாள் வசந்தி.

"படிக்க வேண்டாமோ, அண்ணா கடுதாசியை! எவ்வளவு நல்ல அண்ணா, வாசுண்ணா! உனக்கு ஒரு ஜோரான சின்னப்புடவையனுப்பிடுவான் அண்ணா! இந்தப் பத்திரிகை வாங்காட்டால் என்ன மோசம், சொல்லு!" என்றாள் மீனாக்ஷி.

'அண்ணாவால்தானே இந்த வசவு கிடைத்தது! பிச்சை எடுத்து வாசி என்கிறாள் அம்மா! அண்ணாவால் தானே பத்திரிகை வரவில்லை? அண்ணா கெட்ட அண்ணா!'

இப்படித் தோன்றிவிடுமோ அந்த இள நெஞ்சிலே? அந்தத் திகில்தான் மீனாக்ஷியின் இந்த மென்மொழிகளுக்கு மூலம்! தங்கையின் நோக்கிலே கூட வாசு தாழ்வு அடைய வேண்டுமா? வேண்டாமே! இதுதான் அவள் எண்ணம். கோபத்தினூடே எழுந்த பாசத்திற்கு அறிகுறி!

அவள் எத்துப் பலித்தது.

"ஓ! புடவை அனுப்புவானா அம்மா? சரி, நான் சரோஜாவைக் கேட்டு வாசிச்சுக்கறேம்மா புஸ்தகம்!" என்று சொல்லிவிட்டாள் வசந்தி. வழக்கம் போலவே ஆர அமரச் சாப்பிட்டுவிட்டு, ஆனந்தமாக எழுந்து போனாள்.

ஆனால், மீனாக்ஷியின் மனதில் சாந்தி ஏற்பட்டுவிட்டதா? இல்லை.

பிள்ளையின் மதிப்பைதான் பெற்றவள் காப்பாற்ற பாடுபடுகிறாள். ஆனால் பிள்ளை? அவன் எப்படி இருக்கிறான்?

கணவரை உண்டிக்குக் கூப்பிட்டாள். அவர் வந்தார்;சாப்பிட்டார்;எழுந்தார்; வாசலுக்கே போய்விட்டார்.

இருவரும் அதிகம் பேசவேயில்லை அத்தனை நேரமும். என்ன பேசுவது? இருவர் மனதிலும் ஒரே எண்ணம் சுழன்றது.

'பிள்ளையின் போக்கு மாறி வருகிறது! எல்லாப் பிள்ளைகளையும்போல்தான் ஆகிவிட்டான் நம் பிள்ளையும்! முன்போல் இல்லை அவன்!'

இதே நினைப்புத்தான் இருவர் மனதிலும் தோன்றித் தோன்றி வலுத்தது, பாய்ச்சல் காட்டியது.

மூன்று மாதங்களுக்கு முன்பு வாசு மாதம் தவறாது நூறுரூபாய் அனுப்பி வந்தான். மூன்று வருஷங்கள் ஒரே நியதியுடன் நிதானமுடன், சரியாக அனுப்பி வந்திருந்தவன், கடந்த மூன்று மாதங்களில் தொகையை எண்பது ரூபாய் ஆக்கியிருந்தான், ஆனால், மாதம் தவறாது சரியாக அனுப்பி வந்தான். இப்போதுதான் - பதினைந்து இருபது தினங்களாக - மீண்டும் மாறுதல்; பணம் வரக்காணோம். இன்று வந்திருக்கும் கடிதமோ தொகை ஐம்பது என்று சொல்கிறது! தாமதமாகவும், குறைவாகவும் வருகிறது இந்தத் தடவை, பணம்!

அதுமட்டும் அல்ல வசந்தி பெயரில் கட்டியிருந்த பத்திரிகைச் சந்தாப்பணம் ரூபாய் ஐந்தைக்கூட அவன் குறைத்துவிட்டான். சந்தாவைப் புதுப்பிக்கவில்லை! ஏன் இந்த மாறுதல்?

மீனாக்ஷிக்கும் நாராயணசாமிக்கும் கிடைத்த மானசீக விடை இதுதான்!

'நம் பொருட்டுச் செலவு செய்யும் தொகையை அவன் குறைத்துக் கொண்டு வருகிறான்! அவனுக்கு இஷ்டமில்லை, நம்பொருட்டு பொருள் அளிக்க! வாசு மாறிவிட்டான்! அவன் மனதிலே மாசு ஏற்பட்டுவிட்டது!'

இந்த எண்ணம் - கொஞ்ச நாட்களாகவே தலைதூக்கியிருந்த இந்த எண்ணம் - வலுப்பெற்று நிமிர்ந்து நின்றது இன்று;

புதுக்காதல். புதுஉறவு, புதுத்தோழமை, புதுப்புரைசல் - இவையெல்லாம் மிகத் தீவிரம் உள்ளவை அல்லவா? இவற்றின் புதுவேகம் - இவை உண்டாக்கும் மனக்கிளர்ச்சி - அம்மம்மா! மனது லேசில் தாங்குமா?

'என்ன செய்வது? நம்பிள்ளை இப்படியாகிவிட்டான் . . . உம், அவ்வளவு தான்!'

இவ்வாறு இருவரும் மோனகப் பேசிக்கொள்வதுபோல வெளிப்படப் பேசிக்கொள்ளவும் கூசுவது போல இருந்துவிட்டார்கள்.

பகல் பதினோரு மணி சுமாருக்கு மணியார்டரும் வந்துவிட்டது. ஆனால் வந்திருந்த தொகை ரூபாய் அறுபது. ஐம்பது அன்று.

'ஐம்பது என்று எழுதிவிட்டான் பாவம், கடிதத்தில் . . . ஆனால் அறுபது அனுப்பிவிட்டான்!' என்னும் பரிவுணர்ச்சி, தம்பதிகளுக்குத் தோன்றியது, தொகை எண்ணிக்கை கண்டதுமே, ஆனால்? . . .

நாராயணசாமி பெற்றுக்கொண்டார் தொகையை; மனைவியிடம் கொடுத்தார்; கொடுக்கும்போது மட்டும் அவர் ஒரு சோகப் புன்னகை செய்தார்.

"ஐம்பதுன்னு எதிர்பார்த்ததற்கு அறுபது வந்ததால் இப்போது அதிகப்படி, லாபம்னு தோண்றது!" என்றார்.

"அந்த 'ட்ரிக்' தெரிஞ்சுதான் பிள்ளை எண்பது அனுப்புகிறதை ஐம்பதுன்னு எழுதி, அறுபதாக அனுப்பிச்சுட்டான்போலிருக்கு!" என்றான் மீனாக்ஷி கிண்டலும் கோபமுமாக.

வசந்தி அங்கே இல்லை; அதனால் மேலே தொடர்ந்தாள் பேச்சு. "அவன் பெண்டாட்டி இரண்டாவது குழந்தையை எடுத்துண்டு வந்துடுவாள் போலிருக்கு அடுத்த மாசம்! அந்த டாம்டும் செலவுக்குச் சேர்த்து வச்சுக்கணுமோல்லியோ பணம்!" என்றாள், நிஷ்டூரமாக.

"அதுவும் வாஸ்தவம்தானே! இரண்டு குழந்தைகளாச்சு, அவனுக்கும். எத்தனை நாளைக்கு ஒரே மாதிரி அனுப்ப முடியும்? அவனுக்கு சம்சாரம் பெருகப் பெருக அவனுக்கும் நாலு காசு வேண்டாமா? இந்தக் குழந்தைக்கு பால் டப்பா, துணிமணி. எல்லாம் அதிகப்படிதானே? பணம் வேண்டாமா?"

"அது சரிதான் - ஆனால் அதுக்குத் தகுந்தாற்போல் நம்ம வசந்தி மட்டும் வளரவில்லையா? இனிமேல்தானே அவளுக்குக் கல்யாணம் கார்த்தி? . . . ஓரோரு நகை நட்டு செய்யவேண்டாமா?"

"அதுக்கு நம்ம நிலம் பொலம் போதாமல் இல்லை; போதும். பிள்ளையென்ன, பெற்றவள் என்ன? யாருக்குமே பணம் கொடுக்கக் கொடுக்க ஆசைதான்; திருப்தி வராது. நாம் மட்டும் பிள்ளை நிலைமையறிஞ்சு போகக் கடமைப்பட்டிருக்க வேண்டாமோ? போதும், இந்தப் பணம் கொள்ளை. மற்ற இரண்டு பசங்கள் படிப்புக்கும் அவன் அனுப்புகிறது அம்பது ஆனாலும் சரிக்கட்டும். இங்கே நாம் மீத்து வைக்கிறதை அவனேதான் அங்கே மீத்துண்டு வரட்டுமே! என்ன மோசம்?"

"மோசம் என்ன? ஒரு மோசமுமில்லை! பாசம்தான்! பெத்த பாசம்!' என்றாள் மீனாக்ஷி. வேறொன்றும் கூறாமல் பணத்தை உள்ளே வைக்கப் போய்விட்டாள்.

ஆனால் அவள் மனதில் அமைதி நிலவவில்லை பிள்ளை விஷயமாக அவள் மனதில் முக்காற்பங்கு மனத்தாங்கல், காற்பங்கு நம்பிக்கை. அவள் கணவருக்கு முக்காற்பங்கு நம்பிக்கை, காற்பங்கு மனக்கிளர்ச்சி, நம்பிக்கைத் தளர்ச்சி.

மறுநாள் நாராயணசாமி பிள்ளைக்குக் கடிதம் எழுதினார். பணம் வந்ததற்கு மகிழ்ச்சி கூறி எழுதினார். "வசந்தி குறைபடவில்லை, பத்திரிகை நின்றுபோனதால்," என்று எழுதினார். வழக்கம்போல் பற்பல விஷயங்களை வரைந்தார். ஆனால் ஒரு விஷயம் தெரிவிக்கவில்லை வாசுவிடம்.

"என்ன இருந்தாலும், ஆயிரம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், பெண் குழந்தை பொன் குழந்தை தான்! அவளுக்கு குறைகூடாது! பத்திரிகை வராவிட்டால் போகட்டும்! நாமாகவே சந்தா இதுக்குக் கட்டாவிட்டாலும் வேண்டாம்! அவளை ரேடியோக் குழந்தைகள் சங்கத்தில் சேர்த்துவிடுங்கள்! எழுதிப்போடுங்கள் இன்றைக்கே!" என் மனைவி கூறி இரைந்ததையும், அவ்வாறே செய்துவிட தா_ நிச்சயித்துவிட்டதை மட்டும் அவர் எழுதவில்லை. ஓரோர் சிறு விஷயமும் குடும்ப விஷயமும் பிள்ளைக்குத் தெரியணுமென்று எழுதும் அவர் இந்த விஷயத்தை எழுதக் கை தூண்டியும் எண்ணத்தைக் துண்டித்துவிட்டார்.

மனதில் தோன்றிவிட்ட மாசிற்கு அறிகுறிதானோ இது? ஆம் சந்தேகம் வேறா? அதுவே காரணம்!

மறுநாள் அகில இந்திய வானொலி நிலையத்திற்கு எழுதும்போது கூட அவருக்கு கை துடித்தது - பிள்ளைக்கும் ஒரு கார்டு 'இது விஷயம்' எழுதணுமென்று, பிறகு யோசித்தார்.

"அண்ணா! என் பெயரை ரேடியோவிலே சொல்வார்கள், கேள்!" என, அவளையே, வசந்தியையே இரண்டு நாள் கழித்து எழுதச் சொல்லலாம் என்று தோன்றவே, தாமே எழுதும் எண்ணம் அகன்றது.

நான்கு நாட்கள் சென்றன; வந்தன இரண்டு கடிதங்கள். அகில இந்திய ரேடியோ நிலையம் எழுதிய கடிதம் வசந்தியை ஆனந்தக் கூத்து ஆட்டி வைத்தது. வாசுவின் கடிதம் அவளை, அடுத்தாற்போல் அழ வைத்தது.

"என் நண்பன் ஒருவன் வருகிறான். அங்கிருந்து மாற்றலாகி இவ்விடம் வருகிறான் அவன் மூலம் நம் ரேடியோவைக் கொடுத்தனுப்புகிறீர்களா?" எனக் கேட்டிருந்தான் வாசு. திகைத்தார் நாராயணசாமி. எகிறிக் குதிக்காத குறையாகத் துடித்தாள் மீனாக்ஷி. நேரற்ற ரேடியோம்போலே படபடத்துச் சடசடத்தாள். முரண் செய்தாள் வசந்தி, ரேடியோவை அனுப்பக் கூடாது என்று.

ஆனால் - வேறு வழி? மறுநாளே புறப்படுகிறானாமே வாசுவின் நண்பன்? யோசனைக்கோ, உள்ளம் பதமாக அவகாசத்திற்கோ இடமேது? இந்த அமர்க்களத்தின் நடுவே முனைந்தார் நாராயணசாமி, ரேடியோவை "பாக் அப்" செய்ய.

"அவனே தானே, அங்கே வாங்கினவன், 'இங்கேயே இது இருக்கட்டும்,' என்று சொன்னான்? 'சங்கீத சிட்சை இல்லாவிட்டாலும், கேள்வி மூலமாவது, வசந்தி சங்கீத ஞானம் பெறட்டும்,' என்று சொன்னானே? வசந்தி இப்பொழுதெல்லாம்தான் இசையில் கொஞ்சம் ஆர்வம் காட்டத் தொடங்கியிருக்கிறாள் என்றும் தெரியுமே வாசுவுக்கு? இப்பொழுது ஏன் ரேடியோவைத் திருப்புமாறு கேட்கிறான்?"

இந்தக் கேள்வி வட்டமிட்டது பெரியவர்கள் இருவர் மனதையும். வசந்தி ஒரு மூச்சு அழவும் அழுதாள்.

பெற்றோர் உள்ளத்தே மனத்தாங்கல், பிள்ளைமீது கோபம், உச்சம் அடைந்திருப்பதை அவள் அறியவில்லை எனினும் அவள் பெண் என்னும் கடமையுணர்ச்சியால்போலும் அவர்கள் மனங் குமுறியதையெல்லாம் தன் கண்களால் வாங்கிப் பொழிந்தாள்.

"உம், இவள் கலியாணமும், பசங்கள் இரண்டு பேர் படிப்புப் பொறுப்பும் அவனண்டையே வந்தால், இன்னும் எப்படித்தான் இருக்குமோ? சீரழிவுதான்!' என்று பெருமூச்சு விட்டுக்கொண்டே சொன்னாள் மீனாக்ஷி.

"என்னமோ நாலுமாசமாகவே நேரில்லைதான் அவன். ஆனாலும் எனக்கு எதுவும் விகல்பமாகப்படல்லை. இப்போதான் எனக்கும் ருசுவாச்சு ரேடியோவையே எப்போ திருப்பும்படி கேட்டுட்டானோ . . . உம் . . . கிடக்கிறது போ . . . "

நாராயணசாமியின் கோபம் - சாதுவும் சாத்விகருமான அவர் கோபம் - லேசிலே இத்தகைய விரக்தியாக மாறிவிடுமா? அவர் மனதிலே எத்தனை வருத்தமிருக்க வேணும்?

வானொலிப்பெட்டி போய்விட்டது கல்கத்தா. வசந்தாவுக்கு நீடிக்கவில்லை, ரேடியோக் குழந்தைகள் சங்கத்தில் பங்குபோன வருத்தம். ஆனால் அவள் காணாத குறைகளை அவள் பெற்றோர் கண்டார்கள். மனஞ் சுணங்கியேதான் இருந்தார்கள்.ரேடியோப் பெட்டி போன இருபது நாட்களுக்குள் பணத்தொகை வந்ததைக் கண்டும், தொகை எண்பது ஆனது கண்டுங்கூட அவர்கள் சுணக்கம் போகவில்லை. 'அதைத் திருப்பிக் கேட்டதற்கு 'பர்தி' யாக்கும் இந்தச் சிறுதொகை மிகை? என்றே தோன்றிவிட்டது.

வாராவாரம் கடிதங்கள் பரிமாறிக்கொண்டு வந்த பெற்றோரும் பிள்ளையும் மாதம் ஒன்று எழுதி வந்தார்கள் வாசு ரத்தினச் சுருக்கமாகவும், அன்புத் ததும்பவும், இனிமையாகவும் எழுதி வந்தான். அந்த ஒரு கடிதமும், அவன் பெற்றோரும் அவனுக்கு வருத்தமாகவோ கோபமாகவோ எதுவும் எழுதிவிடவில்லை. எங்கும் உள்ளது தானே, இயற்கைதானே. பிள்ளை மனம் மாறுவது?

'தங்கள் பிள்ளை உயர்ந்தவன் எனத் தற்பெருமை கொண்டு தங்கள் ஸ்தானத்தை உயர்த்திக்கொண்டது தவறல்லவோ?' . . . இவ்வாறுதான் எண்ணினார்கள் அவர்கள். தங்கள் மனப்பொருமலூடே பிள்ளை, நேரில்லாமல். சீரில்லாமல் அனுப்பும் சீரற்ற பணத் தொகையைப் பெற்றுக்கொள்ளும்பொழுதெல்லாம், தொகையை வாங்கிக் கொள்ளாமல் திருப்பிவிடவே தோன்றும். ஆனால் திருப்ப முடியாது கல்லூரிகளில் படிக்கும் பிள்ளைகள்

மீது உள்ள பாசமோ, அன்றி பணத்தை அனுப்பும் வாசுவின்பால் எழும் பாசமோ தடுத்து வந்தது இந்தச் செய்கையை.

ஒரு நாள் . . . வாசலில் சைகிள் மணி ஙணாஙணத்தது. வந்தவன் தந்திக்காரன். தந்தி அடித்திருந்தவன் வாசு.

"அடியே! அடி!" எனக் கூவினார் நாராயணசாமி.

"ஏன்னா! என்ன?" என்று வந்தாள் மீனாக்ஷி

"நம் ஊர்க்கோயில் பிரசாதம் . . . விபூதி குங்குமம் - உடனே அனுப்பவும். நான் சௌக்கியம்."

இதுதான் தந்திச் செய்தி.

"என்னான்னா? எதற்காம் விபூதி குங்குமம்?"

"அதான் எழுதல்லையேடி! இவ்வளவுதானே எழுதியிருக்கான்?"

"யாருக்கு என்ன உடம்போ . . . ? சுவாமி . . . "

"அதான் 'நான் சௌக்கியம்'னு போட்டிருக்கேடி!...."

"நான்னுதானே போட்டிருக்கான்? அப்போ-அவன் பெண்டாட்டி குழந்தை யாருக்காவது ஏதாவது உடம்போ...."

"சேச்சே . . . அப்படி ஏதாவது இருந்தால். அதை எழுதியிருக்கமாட்டானா ஒரு வார்த்தை? தான் சௌக்கியம்னு போடுவானாடி?"

"நிஜந்தான் . . . அவன் பெண்டாட்டி குழந்தைகள் அங்கே வந்தாச்சான்னு கூட அவன் எழுதக் காணோமே? . . . பின்ன என்னவாயிருக்கும்?'

"என்னவோ தெரியல்லையே! . . . "

வஸந்தி வந்தாள் அந்த சமயம். "என்ன அம்மா?" என்றாள் அவள். ஆனால், அவளுடைய ஆவற் கேள்விக்குவிடை கூறாது அவளுக்குப் பணியிட்டாள் மீனாக்ஷி.

"ஓடிப்போய் கடையிலே வெற்றிலை பழம், தேங்காய் வாங்கிண்டு வாடி! இந்தா ரூபா!" என்று தலைப்பில் போட்டிருந்த முடிச்சை அவிழ்த்தாள் மீனாக்ஷி.

"எதுக்கும்மா?"

"கோவிலுக்குப் போகணும்! உம் சட்டுன்னு வா, போ!' அண்ணா விபூதி குங்குமப் பிரசாதம் கேட்டிருக்கான்!'

"எதுக்கும்மா? அண்ணா கட்டாக்கிலேருந்து கல்கத்தா போனபோது கேட்டானே - அது மாதிரியா?'

மீனாக்ஷியும் நாராயணசாமியும் ஒரு வரையொருவர் சடாரென்ப் பார்த்துக்கொண்டார்கள்!

கட்டாக்கிலிருந்து கல்கத்தாவிற்கு வேலை மாற்றிப் போனபோது கேட்டிருந்தான் வாசு, இதேபோல! இப்போது?

"ஏன்னா? நீங்க என்ன நினைக்கிறேள்!" என்றாள் மீனாக்ஷி எடுப்பாக அவரை நோக்கி.

"இருக்கலாம். இப்பவும் வேலை மாற்றிப் போறானோ என்னமோ? "என்று பதிலளித்தார் அவர், சாவதானமாக.

"உம், எங்கேபோனாத்தான் என்ன? இன்னும் இன்னும் கை எட்டாத கடுதாசிகூட எட்டாத இடத்துக்கு. வடக்குக்கும் வடக்கே போறானோ என்னமோ? ஒரு வார்த்தை இது வரைக்கும் மூச்சுவிடக் காணோம். வேலையைப் பத்தித்தானாகட்டும் . . . அகமுடையாள். குழந்தைகள் பத்தித்தானாகட்டும் . . . உம் . . . உலகமே இப்படித்தான் போலிருக்கு."

நாராயணசாமி வசந்தியைப் பார்த்தார்.

"நீ போம்மா . . . சீக்கிரம் வாங்கிண்டு வா!" என்று அனுப்பிவிட்டார் அவளை.

"என்ன இருந்தாலும் நாம் விட்டுக் கொடுத்துப் பேசிவிடக்கூடாது . . .வசந்தி எதிர்க்கத்தானாகட்டும் . . . " என்று ஆரம்பித்தார்.

"உம் . . . எல்லாம் போர்த்திப் போர்த்தித்தான் அவன் பவிஷைக் காப்பாத்தறேன்! மறந்துவிடவில்லை!' என்று எரிச்சலுடன் கூறிவிட்டு நகர்ந்தாள் மீனாக்ஷி.

கோவிலுக்குப் போய் வந்தாள் மீனாக்ஷி - விபூதி - குங்குமம் சிறு சிறு பொட்டணங்கள் கட்டினார் நாராயணசாமி. கவரைத் தபாலில் சேர்த்துவிட்டு வந்தாள் வசந்தி.

"என்ன இருந்தாலும் நம்ம பாசம் எங்கே போகும்? நம்ம கடமை குழந்தைகள் கேட்பதைச் செய்வோம்! செய்கிறோம்!"

இந்தத் திருப்தியும் பெருமையும் ஏற்பட்டது, அத்தனை சினத்தினூடேயும்.

கோவில் பிரசாதம் தாங்கிய தபாற் கவர் புறப்பட்ட மூன்றாம் நாள் வாசுவின் கடிதம் வந்தது. தவறுக் குறி போல 'கிராஸ்' ஏற்பட்டது கடிதங்களுக்கு!

"இன்று வேலையை ஒப்புக்கொண்டேன் - புது வேலையை. சம்பளம் இப்போது ரூபாய் முன்னூற்றைம்பது; இனி சிரமமில்லை. பழைய ரேடியோவை விற்றிருந்தேன். இன்று காலைதான் புதிது வேறொன்று வாங்கியிருக்கிறேன். அதை, அங்கு வருவோரிடம் அனுப்புகிறேன். நேற்று தந்தியடித்திருக்கிறேன் உங்களுக்கு. நான் கேட்டிருந்த விபூதி, குங்குமம் மூன்று நாட்களுள் வந்துவிடும் என எதிர்பார்க்கிறேன் அடுத்த மாதம் அவளையும் குழந்தைகளையும் இங்கு வரவழைக்கலாமென்று நினைக்கிறேன். உங்களுக்கு இச்செய்திகள் மகிழ்ச்சியளிக்கும். எனக்கும், இத்தனை நாள்- எட்டு மாதங்கள் வேலையில்லாமல், வேதனையிலேயே உழன்று வந்த எனக்கும் - , இன்றுதான் மனதில் சாந்தி நிலவியிருக்கிறது.

ஒரு சிறு விஷயமும் என்னிடம் மறைக்காது கடிதத்தில் எழுதிவிடும் தங்களிடம், நான் மர்மமாக நடந்து கொண்டதற்கு, அன்புகூர்ந்து மன்னிக்க வேண்டும்"

கடிதத்தை நாராயணசாமியும் படித்தார்; மீனாக்ஷியும் உன்னி உன்னிப் படித்தாள். இருவர் கண்களிலும் கலக்கம், வெட்கம், மகிழ்ச்சி, பெருமிதம்.

மாசு அற்ற பிள்ளை, அவர்களை மாசற்றவர்களாகச் செய்துவிட்டானே? . . . ஆனால், அதனால் அவர்கள் மனம் மகனைக் கடிந்துகொள்ளவில்லை - அவர்கள் அன்பிலே உள்ள மாசும் சிறுமையும் நீங்கின. நம்பிக்கையும் பச்சாத்தாபமும் துளிர்விட்டு ஒளி வீசின அவர்கள் உள்ளத்திலே. தவறு வழியில் நிற்கும் பிள்ளையிடம் அன்புகொண்டு, பாசத்தினால், அஞ்ஞானத்தினால் ஏமாறுகிற உள்ளம் படைத்துவிட்டதாக நினைத்துக் குமுறி வெதும்பி வந்த அவர்கள் மனம் உண்மை உணர்ந்தது. பிள்ளையின் பெருமை கண்டது.

'அப்பா! தெருக்கோடியிலே வரச்சயே போஸ்ட்மேன் கூப்பிட்டான் கை ஆட்டி! போனேன்! அங்கேயே எனக்குத் தந்துட்டான் இந்தப் புத்தகம்! எனக் கூவிக் குதூகலித்தவாறே ஓடோடி வந்தாள் வசந்தி.

சந்தா கட்டி பத்திரிகை வர கொஞ்சம் நாள் செல்லும் என்று. தனிப் பிரதியாகவே தற்போதைக்கு வாங்கி, தங்கைக்கு வாசு அனுப்பியிருக்கும் பத்திரிகைதான் அது.

**********

(சுதேசமித்திரன், செப்டம்பர் 4, 1949)